16.08.2017

தினமலர்

**நெல் வரத்து அதிகரிப்பு: அரிசி விலை குறைய வாய்ப்பு**

கர்நாடகா மற்றும் ஆந்திராவில் இருந்து , தமிழகத்திற்கு நெல் வரத்து அதிகரித்து உள்ளதால், அரிசி விலை குறையும் வாய்ப்பு உருவாகி உள்ளது.கடந்தாண்டு, டெல்டா மாவட்டங்களில், குறுவை மற்றும் சம்பா பருவ நெல் விளைச்சல் குறைவு காரணமாக , அரிசி விலை உயர்ந்தது. அனைத்து ரக அரிசி மூட்டைகளின் விலை , தலா, 50 - 200 ரூபாய் வரை உயர்ந்தது. இது , நுகர்வோரை பெரிதும் பாதித்தது.இந்தாண்டும் , குறுவை பருவ நெல் சாகுபடி , வறட்சியால் பாதிக்கப்பட்டு உள்ளது. நிலத்தடி நீராதாரங்களை பயன்படுத்தி , குறைந்த பரப்பளவில் சாகுபடி நடக்கிறது. எனவே , அரிசி விலை குறையுமா என்ற கேள்வி எழுந்தது.இதனிடையே , கர்நாடகா மற்றும் ஆந்திராவில் இருந்து , தமிழக அரிசி ஆலைகளுக்கு , நெல் வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது.குறிப்பாக, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலுார் உள்ளிட்ட மாவட்ட அரிசி ஆலைகளில் , வெளிமாநில நெல் லாரிகள் குவிய துவங்கி உள்ளன. இதனால் , அரிசி விலை குறைவதற்கான வாய்ப்புகள் உருவாகி உள்ளன. இது குறித்து , தமிழ்நாடு நெல் , அரிசி வியாபாரிகள் சங்க நிர்வாகி ஒருவர்கூறியதாவது:கர்நாடகா, ஆந்திராவில் இருந்து வரும் நெல் மூட்டைகள் , எதிர்பார்த்த தரத்தில் இல்லை ; அதே நேரத்தில் , மோசம் என்றும் சொல்ல முடியாது. இரு மாநிலங்களில் இருந்து நாள்தோறும் , 300க்கும் மேற்பட்ட லாரிகளில் நெல் வரத்து உள்ளது. இவற்றை அரிசி ஆக்கும் பணி , ஆலைகளில் தீவிரமாக நடக்கிறது. மின் தடையால் , அரிசி ஆலைகள் தொடர்ச்சியாக இயங்குவதில் சிக்கல் உள்ளது. இப்பிரச்னை தீர்ந்தால் , அரிசி உற்பத்தி அதிகரித்து , விலை மீண்டும் குறையும்.இவ்வாறு அவர் கூறினார்.

- நமது நிருபர் –

**மழை தொடரும்**

சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது:தென் மேற்கு பருவமழை தமிழகத்தின் பல இடங்களில் பெய்து வருகிறது. நிலப்பகுதியில் மேல் அடுக்கு சுழற்சி உள்ளதால் இன்றும் நாளையும் உள் மாவட்டங்களில் பரவலாக மழை பெய்யும்.

கடலோர மாவட்டங் களில் லேசான மழைக்கு வாய்ப்புஉள்ளது. இவ்வாறு கூறினர்.
- நமது நிருபர் –

**கொடைக்கானலில் மழை**

கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம் , கொடைக்கானல் மேல்மலை கிராமங்களான கவுஞ்சி, மன்னவனூர், பழம்புத்தூர், கூக்கால், பூம்பாறை உட்பட பல இடங்களில் முக்கிய தொழிலாக விவசாயம் உள்ளது.
இங்கு மலைப்பூண்டு, பீன்ஸ், கேரட்,சவ்சவ், நூக்கல் உட்பட பல மலைக்காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. கடந்த சில மாதங்களாக மழையில்லாததால் கடும் வறட்சி நிலவியது. பொதுமக்கள் குடிநீருக்கு அலைந்தனர். பாசன பயிர்களும் கருகின.
இந்நிலையில் கொடைக்கானலில் கடந்த சில நாட்களாக மழை பெய்து , ரம்மியமான சூழல் நிலவுகிறது. மழையால் விவசாயிகள் உற்சாகமடைந்துள்ளனர். சுற்றுலாப் பயணிகள் பனி மூட்டத்தை ரசிக்க , அதிகளவு வருவதால் நகரப்பகுதி மக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.இந்த மழையை பயன்படுத்தி வில்பட்டி , அட்டுவம்பட்டி, வாழைக்காட்டு ஓடை , மாட்டுப்பட்டி, பள்ளங்கி ஆகிய பகுதிகளில் 100 ஏக்கருக்கு உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது.

விவசாயிகள் கூறியதாவது: கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழை , விவசாயிகளை சுறுசுறுப்பாக்கியுள்ளது. தோட்டங்களில் வேலைகளை செய்து வருகிறோம். தொடர் மழை பெய்தால்தான்
விவசாயம் மீட்சி பெறும் என்றனர்.

**சிறுதானிய உற்பத்தியை மேம்படுத்த அரசு முயற்சி**

மத்திய அரசின் நிதி உதவியுடன் , 10 மாவட்டங்களில், சிறுதானியங்கள் உற்பத்தியை அதிகரிக்கும் பணிகளை , வேளாண் துறை துவங்கி உள்ளது.
அரிசி, கோதுமை, ரவை, மைதா உள்ளிட்ட உணவுப் பொருட்களுக்கு மாற்றாக , சத்துக்கள் மிகுந்த சிறுதானியங்களை சாப்பிடும் பழக்கம் , மக்களிடம் அதிகரித்து வருகிறது.
இதனால், சிறுதானியங்களின் தேவை அதிகரித்துள்ளது. தமிழகத்தில் , போதிய உற்பத்தி இல்லாததால் , வெளி மாநிலங்களை நம்ப வேண்டியுள்ளது.
தற்போது, தமிழகத்தில், 16 மாவட்டங்களில் சிறு தானியங்கள் சாகுபடி நடக்கிறது.
இவற்றில், 10 மாவட்டங்களில், சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்கும் முயற்சிகளை ,

வேளாண் துறை துவங்கி உள்ளது.இது குறித்து , வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:சிறு தானியங்கள் உற்பத்தியை மேம் படுத்த, மத்திய அரசின் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் , 10 கோடி ரூபாய் ; மத்திய அரசின் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் , நான்கு கோடி ரூபாய் செலவிடப்பட உள்ளது.இந்த நிதியில் , விவசாயிகளுக்கு இடுபொருட்கள் உள்ளிட்டவை, மானிய விலையில் வழங்கப்படும். உற்பத்தி செய்யும் சிறுதானியங்களை மதிப்பு கூட்டவும் , விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

- நமது நிருபர் –

தி இந்து
தமிழால் இணைவோம்

**தமிழகம், புதுச்சேரியில் இன்று மழைக்கு வாய்ப்பு : காஞ்சிபுரத்தில் 110 மிமீ மழை பதிவு**



தமிழகம் மற்றும் புதுவையின் பல இடங்களில் இன்று மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் வடக்கு கடலோர பகுதிகள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி நிலவி வருகிறது. இதன் காரணமாகவும் வெப்பச்சலனம் காரணமாகவும் தமிழகம், புதுவையில் பல இடங்களில் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் இன்றும் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று காலை வரையிலான 24 மணி நேரத்தில் காஞ்சிபுரம், தம்மம்பட்டியில் 110 மிமீ மழையும், தேன்கனிக்கோட்டை, பெருங்கலூரில் 100 மிமீ மழையும் பெய்துள்ளது. சிவகங்கை, அஞ்செட்டியில் 90 மிமீ மழையும் , புதுக்கோட்டையில் 80 மிமீ மழையும் பெய்துள்ளது. மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தினமணி

**இதயத்தைப் பாதுகாக்கும் சிறுதானிய உணவுகள்**



நாமக்கல்: சிறுதானிய உணவுகள் ரத்த அழுத்தத்தைச் சீராக்குவதால் , இதய நோயில் இருந்து பாதுகாப்பு அளிக்கின்றன.சிறுதானிய பயிர் சாகுபடி தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம் வழங்குகிறது.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் என்.அகிலா , பேராசிரியர் அழகுதுரை ஆகியோர் தெரிவித்தது:

சிறு தானியங்களில் சோளம் , கம்பு, கேழ்வரகு, சாமை, தினை, பனிவரகு மற்றும் குதிரைவாலி போன்றவை மிக முக்கியமானவை.
மனிதர்களுக்கு ஊட்டச்சத்துக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதில் சிறு தானியங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சிறு தானியங்கள் உடல்நலத்துக்குக் கேடு விளைவிக்கும் நுண் கிருமிகளின் வளர்ச்சியைத் தடுத்து , பெருங்குடலின் செயல்பாட்டைச் சீராக்குகின்றன.

சிறு தானியங்களில் மக்னீசியம் சத்து அதிக அளவில் உள்ளதால் , ஆஸ்துமா, ஒற்றைத் தலைவலி வராமல் தடுக்கின்றன. ரத்த அழுத்தத்தைச் சீராக்குவதால் , இதய நோயில் இருந்து பாதுகாப்பு அளிக்கின்றன.

தினமும் சிறு தானியங்களைப் பயன்படுத்துவோருக்கு இரண்டாம் வகை சர்க்கரை நோய் வருவதில்லை. ரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க உதவுகின்றன. ஊட்டச்சத்துக் குறைவினால் குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களைத் தடுக்க உதவுகின்றன.

சிறு தானிய உணவுகள் பெண்களுக்கு பித்தப் பையில் கற்கள் உருவாவதைத் தடுக்கின்றன. அதிக அளவு நார்ச்சத்து நிறைந்த சிறு தானியங்கள் புற்றுநோய் வருவதைத் தடுக்கின்றன. உடல் பருமன் மற்றும் எடையினைச் சீராக வைத்திருக்கவும் உதவுகின்றன.

**சாகுபடி முறைகள்:**

சிறு தானியங்கள் சாகுபடிக்கு குறைந்த அளவு நீரே தேவைப்படுகிறது. இறவை மற்றும் மானாவாரி நீர்நிலைகளில் , நன்கு வளரக் கூடியவை. சிறு தானியங்களின் வயது குறைவு (75-90 நாள்கள்). மேலும், பூச்சி நோய் தாக்குதல் மற்று பயிர்களை விட குறைவு. அறுவடைக்குப் பின் தட்டைகளை , கால்நடைகளுக்கு தீவனமாகப் பயன்படுத்தலாம்.
மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் மற்றும் பொருள்கள்: தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலம் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சிறு தானிய பயிர்களில் ஊட்டச்சத்து பாதுகாப்பு குறித்த திட்டமானது கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

இத் திட்டத்தின் மூலம் சிறு தானியப் பயிர்கள் சாகுபடி செய்யும் 5 விவசாயக் குழுக்களுக்கு கல் நீக்குதல் , தரம் பிரித்தல் , உமி நீக்குதல் , மாவு அரைத்தல் , சளித்தல் மற்றும் சிப்பம் இடும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இக் குழுக்கள் நாமக்கல் மாவட்டத்தில் , முத்துக்காப்பட்டி, சின்னப்பள்ளம்பாறை, ஆர்.புதுப்பட்டி, ராமநாயக்கன்பட்டி மற்றும் சின்னமணலி ஆகிய பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. சிறு தானியங்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் இந்த இயந்திரங்களை குறைந்த வாடகைக்குப் பயன்படுத்தி பயன் பெறலாம்.

**சிறு தானிய உணவுகள்:** இத் திட்டத்தின் மூலம் , ருசி மற்றும் ஆரைக்கால் சிறுதானிய உணவு என்ற பெயரில் சிறுதானிய அரிசி , மாவு, சத்துமாவு, அதிரசம், ரவை, லட்டு, மிக்சர், முறுக்கு, சிறுதானிய இட்லி பொடி மற்றும் நவதானிய பருப்புப் பொடி போன்ற பொருள்களை உற்பத்தி செய்து , விற்பனை செய்து வருகின்றனர்.

தற்போது சிறு தானியங்களுக்கு நல்ல விலை கிடைப்பதால் , விவசாயிகள் சிறு தானியப்பயிர்கள் சாகுபடியை மேற்கொண்டு கூடுதல் வருவாய் பெறலாம்.

மேலும், சிறுதானியப் பயிர்கள் சாகுபடி , உயர் விளைச்சல் ரகங்கள் மற்றும் மதிப்புக் கூட்டுதல் தொடர்பாக வேளாண் அறிவியல் நிலையத்தைத் தொடர்பு கொள்ளலாம் என்றனர்.

